## சுருக்கம்

பணியாளர் தொகுதி – நெடுஞ்சாலைத்துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணையடிப்படைப் பணி நியமனம் – காலஞ்சென்ற திரு.கி.சிவதாணுப்பிள்ளை என்பவரின் மகன் திரு.சி.வெங்கடகிருஷ்ணன் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் (எச்.எம்.1) துறை

அரசாணை (2ப) எண். 63

நாள் 28.11.2019.
விகாரி, கார்த்திகை 12,
திருவள்ளுவராண்டு 2050.

படிக்கவும்:–

1. அரசாணை (நிலை) எண்.560, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் துறை, நாள் 03.08.1977.
2. முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை–25 கடித எண்.52964/நிர்.1(2)/2002, நாள் 11.07.2019.
3. அரசாணை(நிலை) எண். 100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.

----------

ஆணை:–

நெடுஞ்சாலைத்துறையில் நாகர்கோவில் (நெ) கோட்டத்திற்குட்பட்ட நாகர்கோவில் ஊரக வளர்ச்சி செயற்பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து வந்த திரு.கே.சிவதாணுப்பிள்ளை என்பவர் 23.09.2001 அன்று காலமானார். அவரது பணி அலுவலக உதவியாளர் பதவியில் 24.02.1973 முதல் வரன்முறை செய்யப்பட்டுள்ளது. அவரது மனைவி திருமதி.சி.வசந்தா என்பவர் கேட்டுக் கொண்டதன் பேரில் அவரின் மகன் திரு.சி.வெங்கடகிருஷ்ணன் என்பவர் நெடுஞ்சாலைத்துறையில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு 19.12.2018 முற்பகல் முதல் பணியாற்றி வருகிறார். அவர் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். அரசு ஊழியர் இயற்கை எய்திய நாளான 23.09.2001 அன்று தனியரின் வயது 21 வருடம் 9 மாதம் ஆகும். எனவே, தனியர் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கான கல்வி மற்றும் வயது குறித்த தகுதிகளை நிறைவு செய்துள்ளதாக மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை தெரிவித்துள்ளார். மேலும் தனியரது குடும்பத்தில் எவரும் அரசு மற்றும் தனியார் துறையில் பணி புரியவில்லை என்பதற்கும் அவரது குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்பதற்கான சான்றுகளையும் மற்றும் அவரது பணி வரன்முறைக்கு தேவைப்படுகின்ற அனைத்து மூலச் சான்றுகளையும் அரசுக்கு முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை சமர்ப்பித்துள்ளார்.

Scanned by CamScanner

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்ட ஆணைகளின்படி, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.சி.வெங்கடகிருஷ்ணன் என்பவரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 19.12.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்வதற்கு ஏதுவாக அரசின் ஆணையினைப் பெற்றுத் தருமாறு முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை அவர்களின் செயற்குறிப்பை அரசு நன்கு பரிசீலனை செய்து, அதனை ஏற்று, தமிழ்நாடு அமைச்சுப் பணியில் நெடுஞ்சாலைத்துறையில் கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டுள்ள திரு.சி.வெங்கடகிருஷ்ணன் என்பவரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 19.12.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் தனியர் அப்பதவியில் பணி நியமனத்திற்குரிய போதிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், ஊதிய உயர்வுகள் நிலுவை தொகை இருப்பின், தனியர் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இந்த அரசாணை, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் துறையின் அ.சா.எண்.20171/க்யூ.2/2019-1, நாள் 12.11.2019 மற்றும் பணியாளர் (ம) நிருவாகச் சீர்திருத்தத்துறையின் அ.சா.எண்.37825/வி2/2019-1 நாள் 25.11.2019 இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.கே.பிரபாகர்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை – 25.
திரு.சி.வெங்கடகிருஷ்ணன், இளநிலை உதவியாளர் (நெ),
(முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை-25 வழியாக.)
மாநில கணக்காயர், சென்னை-600018.

நகல்:-

அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர்.
நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் துறை, சென்னை-9.
அரசு கூடுதல் செயலாளரின் நேர்முக எழுத்தர்.
நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை-9.
தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் துறை, சென்னை-9
பணியாளர் (ம) நிர்வாகச் சீர்திருத்தத் துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.
[illegible]

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்